சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS. 77/2020

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜபிரியா | தொழில் | |
| கணவர் பெயர் | யுதிஷ்டனன் | ஜாதி | |
| கிராமம் | புதுகாமூர் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**<u>23.08.2022 முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக 21.08.2013 தேதியிட்ட கிரய பத்திரத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1, 17.03.2016 தேதியிட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, 15.05.2017 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் வா.சா.ஆ.3, 29.05.2017 தேதியிட்ட பதில் அறிவிப்பு வா.சா.ஆ.4. மேற்கொண்டு ஆவணங்களை தாக்கல்செய்து குறியீடு செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.